Registered as a Newspaper

A/L 86
காவிகள்
செவ்வாய், வியாழன்
நாட்களில்
2-30இல் இருந்து 4-30 வரை
ஆரம்பம்: 3—4—86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்
(வலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

உதயன்

விலை ரூ-1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ பங்குனி மீ 19 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப் பிறை 20 (01 04-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:115

AL 86
நுண்கணிதம்
(பிரயோகம் மட்டும்)
புதன், வெள்ளி
நாட்களில்
2-30இல் இருந்து 4-30 வரை
ஆரம்பம்: 2—4—86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)

வந்தாறுமூலையில் போராளிகளும் படையினரும் நேரடி மோதல்

2 சிப்பாய்கள் மரணம்; போராளிகள் இருவர் தற்கொலை

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, ஏப்ரல் 1

மட்டக்களப்பு வந்தாறு மூலையில் போராளிகளும் ஆயுதப்படையினரும் சுமார் ஒரு மணிநேரம் நேருக்குநேர் மோதினார்கள்.

அந்த மோதலில் கொமாண்டோ படைச் சிப்பாய்கள் இருவர் மரணமானார்கள்.

இரண்டு போராளிகள் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்கள்.

மட்டக்களப்புவாழைச்சேனை வீதியில் வந்தாறு மூலை என்ற இடத்தில் நேற்றுக்காலை போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையே நேரடி மோதல் நடந்தது

மூன்று சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர்.

படுகாயமடைந்த 3சிப்பாய்களும் விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர் அவர்களில் இருவர் மரணமானார்கள் எனப் பின்னர் தெரியவந்தது

இச்சம்பவம்பற்றி அறியப்படுவதாவது:-

நேற்றுக் காலை 6மணி அளவில் இரான் அதிரடிப் படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் தேடுதல் நடத்துவதற்காக களுவன் கேணி நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அவர்களை எதிர்நோக்குவதுபோல் டிராக்டர் ஒன்றில் வந்து கொண்டிருந்த போராளிகள் சிப்பாய்கள்மீது கிரனேட்டுக்களை வீசினர். துப்பாக்கியால் சுட்டனர். சுமார் ஒரு மணி நேரத்துக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
01-04-1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.41 முதல் 12.11வரை
ராகுகாலம்:
3.11 முதல் 4 41 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு சக்கர நாற்காலி அன்பளிப்பு

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி. பகவதிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் சிவபதமடைந்த ஓர் ஆண்டு நினைவாக அவரது மகன் திரு கா சிவசேகரம் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு சக்கர நாற்காலிஒன்றை அன்பளிப்புச் செய்தார்

வைத்திய அத்தியட்சகர் திரு சி. எஸ் நச்சினார்க்கினியன் திரு. சிவசேகரத்திடமிருந்து நாற்காலியைப் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம் சத்திரசிகிச்சை நிபுணர் திரு. வே. கிருஷ்ணராசா, வைத்திய கலாநிதி. எஸ் நராசா, வைத்திய கலாநிதி செல்வி. பிலிப்புப்பிள்ளை ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

வடபகுதியில் தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்படலாம்

அரச அதிகாரி கூறுகிறார்

கொழும்பு: ஏப் 1

சில வாரங்களுக்கு முன்னர் வடபகுதித் தொலைபேசித் தொடர்பு நிலைக்களத்தில் இருந்து அகற்றப்பட்ட தொலைபேசி பதிவேடுகள் குறுகிய காலத்திலுள் திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும்.

அல்லாவிடில் நிரந்தரமாக தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்படும்

இதற்கு தொலைபேசித் தொடர்புப் பதிவேடுகளை அகற்றியவர்களே பொறுப்புஏற்கவேண்டும்

இப்படிப் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் சொன்னார்.

பதிவேடுகளை அகற்றியவர்கள் அவற்றை வைத்துக் கொண்டு வாடிக்கையாளரிடம் இருந்து தொலைபேசிக் கட்டணங்களை வசூலிக்க நடவடிக்கை எடுத்து வருகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

மருதானை குண்டினால் அதிர்ந்தது

வெடிக்க வைக்கப்பட்ட போதே மக்கள் பீதி

கொழும்பு, ஏப்ரல் 1

மருதானையில் நேற்றிரவு 9 மணிக்கு குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டபோது அப்பகுதி அதிர்ந்தது.

அநாதரவாக வைக்கப்பட்டிருந்த பார்சல் குண்டு ஒன்றை பாதுகாப்புப் படையினர் வெடிக்க வைத்தனர்: அந்தச் சத்தத்தைக் கேட்டு நகரமக்கள் பீதியினால் கலங்கினர்.

மருதானை தொழில் நுட்பக் கல்லூரிச் சந்திக்கும் அண்மையில் இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

குண்டு தானாக வெடிப்பதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டு வெடிப்புச் சத்தத்தினால் கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் மக்கள் பீதியடைந்திருந்தனர். நேற்றிரவு மருதானையை அண்டிய பகுதிகளில் பதற்றம் நிலவியது.

வாசகர்களே
எச்சரிக்கை..!
உங்களை
ஏமாற்றப் பலர்
இன்று
காத்திருக்கின்றனர்.
—
திகைக்காதீர்கள்!
விழிக்காதீர்கள்!!
இன்று
ஏப்ரல்
முட்டாள்
தினம்
என்பதை
மறந்து விடாதீர்கள்.

இன்று அடையாள வேலை நிறுத்தம்

கொழும்பு, ஏப். 1

வேலைநிறுத்தம் செய்யும் தாதிகளுக்கு ஆதரவாக சுகாதார சேவையைச் சேர்ந்த 21 தொழிற்சங்கங்கள் இன்று (செவ்வாய்) ஒரு நாள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய அமைச்சரவையில் பெரும்மாற்றம்?

புதுடில்லி, மார்ச் 31

மே நடுப்பகுதியில் இந்திய அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

மே மாதத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி ஆபிரிக்க விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

அதன் பின்னர்தான் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படும்.

பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்து பிரதம

(4 ஆம் பக்கம் பார்க்க)

இனக்கொலைகள் பற்றி கூட்டணி ராஜீவிடம் அறிக்கை

சென்னை, மார்ச் 31

இலங்கைத் தமிழர் பகுதியில் நடைபெற்றுள்ள அட்டூழியங்கள், இனக்கொலைகள் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி 105 பக்க அறிக்கை ஒன்றை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் சமர்ப்பித்துள்ளது.

1985 மே மாதத்தில் இருந்து 1986 பெப்ரவரி வரை இரண்டாயிரத்துக்கு அதிகமான தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழர்களுக்குச் சொந்தமான 10,000க்கு அதிகமான வீடுகளும் இக்கால கட்டத்தில் அழிக்கப்பட்டன.

தமிழர் கொலைகள் மூன்று வகையாக இடம் பெறுகின்றன என்று அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

* போராளிகளினால் தாக்கப்பட்ட பின்னர் பதில் நடவடிக்கையாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

இவரது வீட்டிற்கும் இந்தக் கதி

மட்டக்களப்பு, ஏப். 1

நேற்றுக்காலை மட்டக்களப்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதனின் இல்லம் ஆயுதப்படையினரால் சுற்றிவளைத்து சோதனை இடப்பட்டது

வீட்டின் கூரையின் உள்பகுதி எல்லாம் கழற்றப்பட்டுச் சோதனை இடப்பட்டன.

உட்கூரைப் பகுதியினுள் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்தே சோதனை நடத்தியதாக ஆயுதப் படையினர் தெரிவித்தனர்.

இனப்பிரச்சினை:

காமன் வெல்த் மட்ட முயற்சிக்கு இந்தியா எதிர்ப்பு

புதுடில்லி,மார்ச் 31

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு காமன்வெல்த் மட்டத்தில் முயற்சிகள் எடுக்கப்படுவதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

புதுடில்லி வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. ஜிவ்றி ஹாவ்விடம் இந்திய வெளி விவகார அமைச்சர் திரு. பகத் இதனைத் தெரிவித்தார்.

இராணுவத் தீர்வை நாடி அதற்கு காமன்வெல்த் நாடுகளின் ஆதரவை தேடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது குறித்து திரு. பகத் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இலங்கை இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இந்தியாவின் நல்லெண்ண உதவி திருப்திகரமாக இருப்பதாகவும் திரு. பகத் சுட்டிக் காட்டினார்.

தமிழ்ப் போராளிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு பிரிட்டிஷ் கூலிப்படைகள் இலங்கை வந்திருப்பது குறித்து திரு. பகத்கவலை தெரிவித்தார்.

ஆனால் கூலிப்படையை பிரிட்டிஷ் அரசாங்கம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரச அதிபர்கள் உஷார் நிலையில் வைக்கப்படுவர்

கொழும்பு, ஏப். 1

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து 25 நிர்வாக மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் உஷார் படுத்தப்படவுள்ளனர்.

இது சம்பந்தமாக அரசாங்க அதிபர்களின் மாநாடு ஒன்று இந்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகள், அவசர நிலையில் சிவில் நிர்வாகங்களை எப்படி மேற்கொள்ளுவது என்பன குறித்து மாநாட்டில் எடுத்துரைப்பார் என்று தெரிகிறது.

கொண்டாச்சி பண்ணை: தொழிலாளரை உடனே வெளியேறுமாறு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 1

மன்னாரில் கொண்டாச்சி அரச முந்திரிகைப் பண்ணையில் வேலை செய்யும் சுமார் 250 தொழிலாளர்களையும் உடனடியாக அங்கிருந்து வெளியேறும்படி எச்சரிக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இப்பண்ணையில் வேலை செய்பவர்களில் சிலர் சில தினங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டனர். பின்னர் மடு தேவாலயத்துக்கு அருகில் விடுவிக்கப்பட்டனர்.

இந்தப்பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இப்போது பண்ணையில் வேலைசெய்யும் அனைவரும் வெளியேற வேண்டும் என்று காலக்கெடு வழங்கப்பட்டுள்ளதாம்.

போராளிகள் இயக்கம் ஒன்று இப்படிக் காலக்கெடு வழங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இரு தினங்களுக்கு ஒரு முறை தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஏப் 1

யாழ் தபால் நிலையத்தில் இருந்து இரண்டு தினங்களுக்கு ஒரு முறை தபால் பொதிகள் வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

வவுனியாவரை டஸ்களில் அனுப்பிவைக்கப்படும் தபால் பொதிகள், அனுராதபுரத்திற்கு இன்னொரு டஸ்ஸில் வவுனியாவில் இருந்து அனுப்பிவைக்கப் படுகின்றன அங்கிருந்து ரயில் மூலம் கொழும்பு கொண்டு செல்லப்படுகிறது

தேவாலயம் முற்றுகை!

மட்டக்களப்பு, ஏப் 1

மட்டக்களப்பிச் தாண்டவன் வெளி கிறிஸ்தவ தேவாலயத்தை நேற்றுக் காலை ஆயுதப்படையினர் சுற்றி வளைத்தனர்.

அச்சமயம் தேவாலயத்தினுள் ஆராதனை நடந்து கொண்டிருந்தது. ஆயுதப்படையினர் சுற்றி வளைத்த செய்தி அறிந்து உள்ளே இருந்த பக்தர்கள் பதற்றம் அடைந்தனர். படையினர் பக்தர்களைச் சோதனை இட்ட பின்னரே ஆலயத்தை விட்டு அகன்றனர்.

இச்சம்பவம் குறித்து ஆலயப் பங்குத் தந்தை வாம்பெக் அடிகளார் மட்டக்களப்புப் பொலீஸ் அதிபரிடம் முறையிட்டார்.

"ஓ" குறூப் இரத்தம் தேவை

நல்லூர், ஏப். 1

"ஓ" குறூப் இரத்தத்திற்காக காத்திருக்கும் இரண்டு நோயாளர்களுக்கு உடனடியாக உதவுங்கள்.

யாழ் வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ் வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் இரு நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை செய்வதற்காக "ஓ" குறூப் இரத்தம் உடனடியாகத் தேவைப்படுகிறதாம்.



இந்தியாவிலை இரண்டு பிளேன்களை காணயில்லை எண்டு சொன்னவை.

அது இரண்டும் எங்கடை பெடியளிட்டை இருக்குது எண்டு சொல்லினம்!

சங்கானையில் வீதித்தடை

நல்லூர், ஏப். 1

சங்கானையில் நேற்று வீதித்தடைப் போராட்டம் நடத்தப்பட்டது

கடந்த வெள்ளிக்கிழமை சங்கானையில் நடைபெற்ற கொள்ளையைக் கண்டித்தே பொதுமக்கள் வீதித் தடையை ஏற்படுத்தினர்.

சங்கானைச்சந்தை அருகில் நடைபெற்ற இப்போராட்டத்தினால் மானிப்பாய் வீதி நேற்று முற்றாகத் தடைப்பட்டது.

சங்கானையில் உள்ள பிரபல வர்த்தகரும் நகைக் கடைக்காரருமான ஒருவரின் வீட்டிலேயே கொள்ளை நடந்தது.

முல்லைத்தீவு முகாமைச் சூழவுள்ள பகுதியில் 10 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப் 1

முல்லைத்தீவு ஆயுதப் படை முகாமைச் சூழவுள்ள பகுதியில் நேற்று மாலை கடும் தேடுதல் நடத்திய சீருடையினர் அப் பகுதியிலிருந்து பத்துப்பேரைக் கைதுசெய்து அழைத்துச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கவச வாகனங்களிலும் நடைபவனியாகவும் சென்ற ஆயுதப்படையினர் இந்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது.

இதேவேளை முல்லைத்தீவுக் கடற்பகுதியில் உள்ள பீரங்கிக் கப்பலிலிருந்து அடிக்கடி பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்படுவதால் அப்பகுதி மக்கள் பீதியடைந்திருக்கின்றனர்.

'மூன்று முகம்' தந்த பீட்டர் செல்வகுமார்

'மூன்று முகம்' படத்தில் அலெக்ஸ் பாண்டியனின் கதாபாத்திரம், மறக்க முடியாத ஒரு கதாபாத்திரம். அந்தக் கதாபாத்திரத்தைஉருவாக்கிய எழுத்துச் சிற்பி தான்பீட்டர் செல்வகுமார்.

அடையார் கேட்டிலுள்ள அழகான அவரது வீட்டை மூன்றுமுகம், சிவப்பு சூரியன், சந்திப்புபட ஷீட்டுகள் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

எல்லோருடனும் நட்பாகப் பழகும் இயல்புடையவர் இவர்

அவர் சொல்கிறார்.

'ரயில்வே ஆஸ்பத்திரியில் லேப் டெக்னிஷியனாக இருந்த நான், சினிமாவில் நல்ல டெக்னிஷியனாக வரவேண்டும் என்ற ஆசையில் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு சென்னைக்கு வந்தேன்.

எங்கள் ஊர்க்காரரான (திருப்பத்தூர்) மறைந்த இயக்குநர் டி. என். பாலுவிடம் உதவியாளராக சில காலம் பணியாற்றினேன்

'புதிய வாழ்க்கை' படத்திற்கு முதன் முதலாக கதை எழுதினேன் படம் சரியாக ஓடாததால், எனக்கு பழைய வாழ்க்கையே நீடித்தது.

தன்னம்பிக்கையை தளரவிடாமல் பட்டினியோடு ஒரு தர்ம யுத்தம் நிகழ்த்தி 'தர்ம யுத்தம்' என்ற படத்திற்குக் கதைவசனம் எழுதினேன்.

படம் நன்றாக ஓடியும் என்னை யாரும் மதிக்கவில்லை. திரையுலகில் காணாமல் போனவர்கள் பட்டியலில் என் பெயரும் வந்து விடுமோ எனப் பயந்தேன்; உள்ளம் நொந்தேன் ஆனால் உறுதியை விடவில்லை.

சத்யா மூவிஸாரின் 'மூன்றுமுகம்' படத்திற்கு கதைவசனம் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தப் படம் மிகப் பெரிய வெற்றியை அடைந்து எனக்கு ஒரு வெற்றி முகமாக அமைந்தது.

அதன் பிறகு சிவப்பு சூரியன், சந்திப்பு, கைராசிக்காரன், உங்க வீட்டுப்பிள்ளை, எரிமலை போன்ற படங்களுக்குக் கதைவசனம் எழுதினேன் அப்படங்களும் வெற்றியடைந்தன.

அதன் மூலம் திரையுலகில் நிலையான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டேன்' என்றார்.

தினசரி சினிமா

அமெரிக்க அமைச்சர் ஆசியாவுக்கு விஜயம்

நிலைமைகளை நேரில் அவதானிப்பார்

அமெரிக்க பாதுகாப்பு மந்திரி கஸ்பார் வெயின்பேகர் ஆசியநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பீன்ஸ், ஜப்பான் இந்தோனேசியா, பங்களாதேஷ் மற்றும் வேறுசில நாடுகளுக்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை அவதானிப்பார் எனவும் தெரியவருகிறது.

பஞ்சாப் கலவரம்

சூத்திரதாரிகளைத் தேடி தீவிர பொலீஸ் வேட்டை

வன்முறைகள் அடக்கப்படுமென முதலமைச்சர் பர்னலா அறிவிப்பு

சண்டிகார், மார்ச்.31

பஞ்சாப் மாநிலத்தில் இந்துக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளின் சூத்திரதாரிகளையும், தீவிரவாதிகளையும் தேடும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

கடுமையான நடவடிக்கைகளை பஞ்சாப் அரசு எடுக்க இருப்பதாகவும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அடக்கப் பட்டுவிடும் எனவும் முதலமைச்சர் பர்னலா அறிவித்துள்ளார்.

தீவிரவாதிகளின் மறைவிடங்கள் எனச் சந்தேகிக்கப்படும் இடங்களில் பொலீஸாரும் பரா- இராணுவத்தினரும் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

ஜலந்தர் மாவட்டப் பகுதிகளில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

வன்முறை நடவடிக்கைகளை நடத்தியதாகக் கருதப்படும் 3 பேரையும் ஜலந்தர் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட ஜீப்பையும் பொலீஸார் கைப்பற்றினர்

கொலைத் தாக்குதல்களைத் தாமே மேற்கொண்டதாக கைது செய்யப்பட்டவர்கள் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனிடையே அமிர்தசரஸிலுள்ள பொலிஸ் நிலையத்தின் மீது தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டனர்;

எனினும் இந்தத் தாக்குதலால் பொலீஸ் நிலையத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

பஞ்சாப் கலவரங்கள் பற்றி விவாதிப்பதற்கு ஆளும் அகாலிதள் கட்சி கூட்டமொன்றை சண்டிகாரில் ஏற்பாடு செய்துள்ளது

கட்சித் தலைவர் முதலமைச்சர் பர்னலா இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

பஞ்சாப் நிலைமைகளை அவதானிக்கசென்றதுணை அமைச்சர் அருண் நேருவும் இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் அர்ஜுன் சிங்கும் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் நிலைமைகளை விளக்கிக் கூறினர்.

அவர்களுடன் கூடிச் சென்ற பஞ்சாப் முதல்வர் பர்னலாவும் ராஜீவுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதை அடுத்து பஞ்சாபில் சட்டம் ஒழுங்குகளைப் பேணும் நடவடிக்கைகளில் கருத்து மோதல் ஏற்படாது கட்சி மட்டத்தில் விவாதிப்பதற்காகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது.

ரஷ்ய அழைப்பை ஏற்க முடியாது

வெள்ளை மாளிகை அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 31

ரஷ்யாவின் அணு ஆயுத பரிசோதனைத் தடைப்பேச்சுக்கான அழைப்பை அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

வெள்ளை மாளிகையின் நிர்வாக அதிபர் இதபற்றிய ஜனாதிபதி ரேகனின் அறிவிப்பை பகிரங்கப் படுத்திவிட்டுதொடர்ந்து கூறினார்.

இரு தலைவர்களும் சந்திக்கும் இரண்டாவது உச்சிமாநாடு ஒன்றையே அமெரிக்கா நடத்த விரும்புகிறது.

அந்த மாநாட்டில் அது பற்றிய விடயங்களைவிவாதிக்கலாம்.

அணு ஆயுத இடைக்காலத் தடைபற்றிய ரஷ்ய யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ரஷ்யா எல்லா அணு ஆயுத சோதனைகளையும் நடத்தி முடித்துவிட்டது. இடைக்காலத் தடையினால் ரஷ்யாவுக்கு இந்த விடயத்தில் எந்தவகை இழப்பும் ஏற்பட்டுவிடாது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அணு ஆயுத சோதனைகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. வலுத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு அமெரிக்கா இந்த சோதனைகளைத் தொடர்ந்து நடத்தியே ஆகவேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கடாபி சூளுரை

திரிப்போலி, மார்ச் 31

ஷித்தே வளைகுடா கடற் பிராந்தியம் லிபியாவின் கடல் எல்லைக்கு உட்பட்டதாகும். இந்த உரிமைக்காக லிபியா தொடர்ந்து போராடும்

திரிபோலியில் நடந்த பிரமாண்டமான கூட்டமொன்றில் கேர்ணல் கடாபி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

லிபியா சர்வதேச கடல் எல்லைச் சட்டங்களை மதிக்கிறது. எனினும் ஷித்தே வளைகுடா கடற் பிராந்திய விடயத்தில் இது செல்லுபடியற்றதாகும்.

அமெரிக்கா தொடர்ந்து லிபியா மீது தாக்குதல்களை மேற்கொண்டால் உலகெங்கும் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களில் இலக்குவைத்து லிபியா தாக்குதல் மேற்கொள்ளும்.

வெளி உலகில்

பங்களாதேஷ்

பல்கலைக் கழகத்தில் மாணவர் மோதல்

ஒருவர் மரணம் 20பேர்காயம்

டாக்கா, மார்ச்.31

பங்களாதேஷில் டாக்கா பல்கலைக்கழக மாணவரிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார் 20க்கு மேற்பட்ட மாணவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

இந்தத் தாக்குதலின் போது கைத்துப்பாக்கிகள், கத்திகள், பொல்லுகள் போன்ற ஆயுதங்களை மாணவர்கள் தாராளமாகப் பிரயோகித்ததாகக் கூறப்படுகிறது

பங்களாதேஷில் வரும் 7ஆம் திகதி நடைபெறும் தேர்தல் தொடர்பாக எழுந்த கருத்துமோதல்களே இந்த பல்கலைக் கழகக் கலவரத்துக்குக் காரணம் எனவும் தெரியவருகிறது.

எர்ஷாட் இராணுவ அரசின் போக்குகளை ஆதரிக்கும் மாணவர்களும் எதிரணிகளுக்கு ஆதரவான மாணவர்களும் இந்த மோதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

ரமண விழா

புதுடில்லி, மார்ச் 31

ரமண மகரிஷியின் நினைவு நிகழ்ச்சியான பக்தி இசை நடன விழா டெல்லியில் நடைபெறுகிறது

பெங்களூரிலுள்ள ரமண மகரிஷி அமைப்பும் புதுடில்லி ரமண கேந்திரமும் கூட்டாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன.

லிபியாவும் தயார்

அபுதாபி, மார்ச் 31

அமெரிக்க கடற்படைக்கு சவாலாக நடவடிக்கைகள் மேற்கொள்ள லிபியா தயார் நிலையில் இருக்கிறது

இவ்வாறு கேர்ணல் கடாபியின் விசேட தூதர் அட்மிரல் ஹமீட் அபுதாபியில் கருத்துவெளியிட்டுள்ளார்.

விற்பனைக்கு

86 ஸ்ரீ 5642 இலக்கம் உடைய Honda - M B.8 மோட்டார் சைக்கிளும் அத்துடன் Love Birds கூட்டுடனும் விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும்; 106 1, கன்னாதிட்டி, காளி கோயில் அருகாமையில், யாழ்ப்பாணம்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

நவாலி மேற்கு சனசமூக நிலையம்

வட்டுக்கோட்டை, ஏப். 1

நவாலி மேற்குப் பகுதியில் 11 ஆயிரம் ரூபா செலவில் புதிய சனசமூக நிலையத்துக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

இக்கட்டடத்துக்கான செலவுக்குரிய 11 ஆயிரம் ரூபாவையும் இங்குள்ள பொதுமக்களே கொடுத்து உதவியுள்ளனர்.

கட்டட வேலைகளையும் இங்குள்ள பொதுமக்களே சிரமதான முறையில் செய்துள்ளனர்.

திருமதி பகவதிப்பிள்ளை கந்தசாமி
அவர்கள் சிவபதம் அடைந்த

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
14 06 - 1911



ஆண்டவன்
அடியில்:
01 - 04 - 1985

எம்மை வாழ்வித்த — எமக்கு ஒளிதந்த —
அன்புத் தெய்வம்!
உங்கள் ஆத்ம சாந்தி வேண்டிப்
பிரார்த்திக்கும்,
அன்புப் பிள்ளைகள், அன்பு மருமக்கள்
அன்புப் பேரப்பிள்ளைகள்.

33 1, கயிலாச பிள்ளையார்
கோவில் வீதி, நல்லூர்

பங்காளர் தேவை

சகலவிதமான பாவனைப் பொருள்கள் விற்பனை செய்யக் கூடிய ஸ்தாபனம் ஒன்று வெகு விரைவில் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பான ஒரு சூழலில் நவீன சந்தைக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது நேர்மையான பங்காளர்கள் தேவைப்படுகின்றனர். விரும்பியோர் 07-04-1986க்கு முன் தொடர்புகொள்ளவேண்டியது:

விளம்பர இலக்கம்: 11,
'உதயன்' மேற்பார்த்து,
15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

மயிலிட்டி வடக்கு விவசாயிகள் திரும்பிச் செல்ல அச்சம்

மக்கள் முகம்

இதனால் பயிர்கள் கருகுகின்றன

காங்கேசன்துறை, ஏப்ரல் 1

மயிலிட்டி வடக்கில் இருந்து வெளியேறிய 53 விவசாயக் குடும்பங்களுக்கும் விவசாயம் செய்த பயிர்களைப் பராமரிக்க அனுமதி கிடைத்துள்ளது. எனினும் விவசாயிகள் அங்கு செல்ல அச்சம் கொண்டுள்ளனர்.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

மயிலிட்டி வடக்குப் பகுதியில் விவசாயம் செய்து வந்த 53 விவசாயக் குடும்பங்கள் விமானநிலைய விஸ்தரிப்பால் தாம் விவசாயம் செய்த பயிர்களைக் கைவிட்டு வெளியேறியிருந்தன

மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி கரை பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் யாழ் அரசாங்க அதிபர் செய்த ஏற்பாட்டின்படி அண்மையில் பிரிகேடியர் திரு ருபசிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர்.

இதனை அடுத்து பகல் 2மணி முதல் மாலை 5 மணி வரை பயிர்களைப் பராமரிக்க அனுமதி வழங்கப்பட்டது.

ஆனாலும் விவசாயிகள் அங்கு செல்ல அச்சம் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

இதனால் விவசாயப் பயிர்கள் கருகி அழியும் நிலையை அடைந்துள்ளன.

செம்பியன்பற்று பாடசாலை அவலம்

யாழ்ப்பாணம், ஏப்.1

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் 150 மாணவர் படிக்கின்றனர்.

ஒரே ஒரு ஆசிரியையே கடந்த 10 ஆண்டுகளாக இப்பாடசாலையில் படிப்பித்து வருகின்றார்.

ஆறும் வகுப்பு வரை நடத்தப்படும் இந்தப் பாடசாலைக்கு மேலும் 2 ஆசிரியர்களையாவது நியமிக்கும்படி கல்வித்திணைக்களத்துக்கு வேண்டுகோள்விடப்பட்டுள்ளது.

ஓமந்தை இராணுவ முகாம் அதிகாரி நடத்திய மாநாடு

யாழ்ப்பாணம் ஏப் 1.

ஓமந்தை ஆயுதப்படை முகாம் பொறுப்பு அதிகாரி, அப்பகுதி கிராம சேவையாளர்கள், பொது மக்களை அழைத்து மாநாடு ஒன்றை நடத்தினார் என்று அறியப்படுகிறது.

இந்த மாநாடு, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பொதுமக்களுக்கு படையினர்விரோதிகள் அல்லர் தீவிரவாதிகளைப் பிடிக்கவே ஆயுதப்படையினர் முகாமிட்டுள்ளனர் அந்த நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு பொதுமக்கள் தரவேண்டும்-

இப்படி இராணுவ அதிகாரி மாநாட்டில் கூறினார்.

அன்பளிப்பு

ஊர்காவற்றுறை, ஏப்.1

கருவில் ஐயனார் தேவஸ்தானத்திற்கு மின்சார இயந்திரம் ஒன்றுஅன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது

வேலைக்கு திரும்ப விரும்பும் தாதிகளுக்கு சலுகை

கொழும்பு, ஏப்.1

வேலைக்குச் செல்ல விரும்பியும் சமுகமளிக்க முடியாத நிலையில் உள்ள தாதிகள் தாங்கள் விரும்புகின்ற எந்த ஆஸ்பத்திரியிலும் சமுகமளிக்கலாம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனிடையில், தாதிகள் வேலை நிறுத்தம் காரணமாக கிராமிய ஆஸ்பத்திரிகளும் இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தாதிகள் சங்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்று [illegible] கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப் 1

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக வைத்திய கலாநிதி வி. விஜயராசா மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை கல்லூரியின் தம்பர் ஞாபகார்த்த மண்டபத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு,
வி. விஜயராஜா

உபதலைவர்கள்:- பேராசிரியர் கே. தெய்வேந்திரராஜா, திரு. எஸ். இராமகிருஷ்ணன்.

செயலாளர்:- திரு எஸ். சிவசோதி

உபசெயலாளர்:- திரு. எஸ். சந்திரபோஸ்.

பொருளாளர்:- திரு. எஸ் சந்திரசேகரம்

நிர்வாகசபை உறுப்பினர்கள்:- திருவாளர்கள் கே மாணிக்கவாசகர், வி. ரி. வேலிங்கம், கே. கந்தசாமி, எஸ். இராஜதுரை, வி ரி கணேசலிங்கம், ஈ. ஆர் திருச்செல்வம், என் இராசரத்தினம், எஸ். நடராஜா, ஜனாப். எம். எம். எஸ். அப்துல் காதர்.

திருமலை - வவுனியா தினமும் ஒரு பஸ் சேவை

திருகோணமலை, ஏப் 1

திருமலையில் இருந்து வவுனியாவுக்கு தினமும் பஸ்சேவை தற்போது நடைபெறுகின்றது.

காலை 6 மணிக்கு திருமலையில் இருந்து புறப்படும் இந்த பஸ் ஹொரவப்பொத்தானை ஊடாக வவுனியாவுக்குக் காலை 11மணிக்கு வந்து சேருகிறது.

பின்னர் நண்பகல் 12 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்படும் இப்பஸ் மாலை திருகோணமலையை அடைகின்றது.

தினமும் ஒரு சேவை மட்டுமே நடைபெறுகின்றது.

சமுத்திரா மல்ரி சேவிசஸ்

உங்கள் தேவை? எங்கள் சேவை!

திருமண சேவையில்

முன்னோடியான எமது ஸ்தாபனத்தில் டாக்டர்கள், எஞ்சினியர்கள், B Sc , B.A., T A , பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், தாரமிழந்தோர், விதவைகள் ஆகிய பல தரத்திலும் ஆண், பெண் இருபாலாரும் இருக்கிறார்கள். உங்கள் தேவைகளுக்கு நேரடியாகவோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளுங்கள். உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதர சேவைகள்:

காணி, வீடு வாங்க அல்லது விற்க விரும்புவோர், கட்டடங்கள் கட்டுதல், திருத்துதல் போன்ற வேலைகள் மேற்கொள்ள விரும்புவோர்,
மின்சார உபகரணங்கள், தளபாடங்கள் வாங்க, விற்க விரும்புவோர் நேரடியாகவோ கடித மூலமாகவோ தொடர்புகொள்ளுங்கள்.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
எமது கிளைகள்
யாழ்ப்பாணத்திலும் சங்கானையிலும்
விரைவில் நிறுவப்படவுள்ளன என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
எங்கள் பிள்ளைகளுக்கும் திருமணம் நடக்குமா? என்று ஏங்கித் தவிக்கும் பெற்றோர்களே!
இன்றே எங்கள் இலவச உதவியை
நாடுங்கள்!

தொடர்பு;
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
303, பலாலி றோட்,
கோண்டாவில் கிழக்கு (சந்தி), கோண்டாவில்.
கிளை நிறுவனங்கள்:
முருகமூர்த்தி லேன், நெல்லியடி, கரவெட்டி.
கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பழை

உதய சங்கற்பம்

தினமும் ஏதாவதைப் பேசிக்கொண்டிருக்கும் படிப்பாளியை விட, குறைந்த நேரத்தில் அழகான உறுதியான ஒரு ஜோடி சப்பாத்தைத் தயாரிப்பவனே சிறந்த மனிதன்.

.. சுவாமி விவேகானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22078
த. பெ. 28
01·04·86

அணு ஆயுதத் தடை; யாருக்கு அக்கறை?

உலகில் அணு ஆயுதத் தடை. அதனைச் செயற்படுத்த ரஷ்யா விரும்புகிறது. அமெரிக்காவுடன் நேருக்கு நேர் விரிவாகப் பேசுவதற்கு விருப்பமும் தெரிவித்திருக்கிறார் அந்த நாட்டுத் தலைவர் திரு. கொர்பச்சேவ்.

ஆனால் அமெரிக்கா பேச்சுவார்த்தைக்கு மறுத்துவிட்டது. வேண்டுமானால் மீண்டும் உச்சி மாநாடு ஒன்றை நடத்தலாம் என்று அறிவித்திருக்கிறது.

உச்சி மாநாடு நடத்தி ஒரு முடிவு எடுக்கும்வரை இடைக்காலத் தடை ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்பதே ரஷ்யாவின் விருப்பம்.

இல்லை, இல்லை. ரஷ்யா தனது அணு ஆயுதங்களை எல்லாம் சோதித்துப் பார்த்து விட்டது. நாம் அப்படியல்ல இத்துறையில் நாம்இன்னமும் எவ்வளவோ சோதனைகளும் சாதனைகளும் செய்ய வேண்டி உள்ளன.

ஆகையால் இடைக்கால அணு ஆயுதத் தடை பற்றி இப்போதைக்கு நினைக்க முடியாது. வேண்டுமானால் திட்டமிட்ட அடிப்படையில் உச்சி மாநாடு ஒன்றை நடத்தி அதில் ஒரு தீர்க்கமான, இருவரையும் பாதிக்காத முடிவை எடுப்போம்.

இவ்வாறு அமெரிக்க அதிபர் றேகன் அறிவித்திருக்கிறார்

அணு ஆயுதங்கள் உலகத்தை ஒரு சில நிமிடங்களுக்குள் பொசுக்கிவிட வல்லவை அவற்றால் மனிதனுக்கும் உலகத்துக்கும் நாசமே அன்றி வேறில்லை மனித குலத்தையும் ஏனைய ஜீவராசிகளையும் பூண்டோடு அழித்து நாசகாரம் செய்ய வல்லவை அவை.

இதனை உலக மக்கள் எல்லோரும் அறிவார்கள்; புரிவார்கள். ஆனால், இரண்டு வல்லரசுகளும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும், பரீட்சிப்பதையும் ஒரு இலேசான விளையாட்டாகக் கருதி வருகின்றன.

உலக சமாதானத்தை மட்டுமன்றி மனித குலத்தையே பயமுறுத்தி நிற்கும் அணு ஆயுதங்களை முற்றாகத் தடை செய்ய வேண்டும். அதனையே உலக மக்கள் அனைவரும் விரும்புகிறார்கள் .

தடை முயற்சி எப்போதோ நடந்திருக்க வேண்டும் இவ்வளவு பிந்தியாவது நடைபெறுகிறதே என்று மக்கள் எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள்.

ஆனால் அந்த முயற்சியைப் பாழடிக்கும் தொனியில் அமெரிக்கா பேசுகிறது. ரஷ்யா உற்பத்தி, பரிசோதனை எல்லாவற்றையும் செய்ததாக ஐந்தொகைக் கணக்குப் பார்க்கிறது இடைக்கால தடைக்கு தான் உடன்பட இயலாது என்றும் சொல்கிறது.

அணு ஆயுதங்களைத் தடை செய்ய வேண்டும் என்பதில் மனப்பூர்வமான விருப்பம் இருந்தால் அமெரிக்கா இவ்வாறு பேசமாட்டாது. கணக்கும் பார்க்க மாட்டாது. விதண்டா வாதமும் பேசமாட்டாது.

பொதுவாக அமெரிக்காவுக்கு சமாதான முயற்சிகளில் அடிப்படையாகவே விருப்பமில்லை. இதற்கு முன்னர் பலதடவைகள் இது நிரூபணமாகி இருக்கிறது.

தனது நட்சத்திர யுத்தத் திட்டத்தை நியாயப்படுத்தும் முயற்சிகளிலேயே அது எப்போதும் அக்கறை காட்டி வருகிறது.

நிலம், நீர், வானம் ஆகிய முப்பிரதேசங்களையும் யுத்தப் பகுதிகளாக மாற்றி, தனது ஆயுத விற்பனையையும், அதன் மூலம் உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும் எல்லா நாடுகளிலும் தனது ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் நிலைநாட்ட வேண்டும் என்ற தனது இலட்சியத்தை அடைவதையே அது பெரிதாகக் கொள்கிறது

அதனால் தான் பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளிற் கூடத் தனது மயிற்கால்களை ஊன்ற முயற்சித்து வருகிறது.

ஏகாதிபத்திய வெறியே இத்தனைக்கும் காரணம் அமெரிக்காவை வழிக்குக் கொண்டு வருவதற்கு ரஷ்யாவின் சமாதான முயற்சிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவது உலக நாடுகளின் கடமையாகும்.

அவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே அணு ஆயுத பயங்கரத்தை நீக்கி, உலக மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியும்.

மினி பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட பணம், கைக்கடிகாரம்

பலாலி, ஏப். 1

கடந்த 24 ஆம் திகதி மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலி நோக்கிவந்த மினி பஸ்ஸில் ஒரு பெண்ணின் கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டது.

இதற்கு முன்பும் கடந்த மாதம் இதே மினி பஸ்ஸில் 80 ரூபா நடத்துனரால் கண்டெடுக்கப்பட்டது.

இவை தற்போது வலிகிழக்கு தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் அச்சுவேலித் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றை நேர்மையுடன் ஒப்படைத்தவரை சங்கத் தலைவர் திரு. மதனசேகரம் பாராட்டினார்.

இப்பொருள்களுக்குரியவர்கள் அவற்றை தகுந்த ஆதாரத்துடன் சங்கத் தலைமையகத்துக்கு வந்து பெற்றுச் செல்லுமாறு தலைவர் வேண்டியுள்ளார்.

ஞாயிறு நடந்த அட்டகாசத்தை அடுத்து

கட்டுவன் பகுதியிலிருந்து பலர் வெளியேறினர்

பலாலி, ஏப் 1

ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவங்களை அடுத்து கட்டுவன் பகுதியில் இருந்து பொதுமக்கள் பலர் பீதியால் வெளியேறினர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுவனில் நடந்த சம்பவம் வருமாறு:-

காலை 10 மணி அளவில் நடை பவனியாக கறுப்புச் சட்டைக்காரரும் ஏனைய சிப்பாய்களுமாக சுமார் 50 பேர் கட்டுவன் பக்கமாகவும் மயிலிட்டிப் பக்கமாகவும் வந்தனர்.

மயிலிட்டி கிராமக் கோட்டுக்கு அண்மையில் உள்ள பிரகாஷ் அரிசி ஆலைக்குள் சிலரும் அயலில் வீடுகளுள் சிலருமாக நுழைந்தனர்

வீடுகளிலும் அரிசி ஆலைகளிலும் நின்றவர்களை அழைத்து வந்து முகாம் குப்புறப் படுக்கச் செய்தனர். இவர்களில் சிலர் தாக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து தம்முடன் கொண்டுவந்த பெற்றோல், டீசல் ஆகியவற்றை அரிசி ஆலைக்குள்ளும், வீடுகளுக்குள்ளும் ஊற்றினர்.

அதற்கு தீ வைத்த அவர்கள் அரைவாசிக்கு மேல் பற்றி எரியும் வரை அவ்விடங்களில் சுட்டபடியே நின்றனர்.

சில வீடுகள் குண்டுகள் வைத்துத் தகர்த்தப்பட்டன.

இச்சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஹெலிக்கொப்டர் ஒன்று உயரப் பறந்து கண்காணிப்பு நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருந்தது.

1000 மீற்றர் பாதுகாப்புப் பிரதேசத்துள் அடங்கும் வீடுகள், உடைமைகளே இவ்வாறு நாசம் செய்யப்பட்டன என்று தெரியவந்துள்ளது.

நாசம் செய்யப்பட்ட அரிசி ஆலையில் 10 லட்சம் ரூபா பெறுமதியான நெல், அரிசி, இயந்திர சாதனங்கள் இருந்தன.

வீடுகளில் இருந்து எவ்வித பொருளையும் எடுத்துச் செல்ல எவரையும் அனுமதிக்கவில்லை சகலதும் எரித்து நாசம் செய்யப்பட்டன.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து கட்டுவன், மயிலிட்டி, பலாலி, குரும்பசிட்டி, தெல்லிப்பளை, வயாவிளான் பகுதிகளில் ஒரே பரபரப்பும் பதற்ற நிலையும் காணப்பட்டன.

பஸ் கட்டணம் சீருடையினர் காட்டும் அக்கறை

நல்லூர், ஏப்ரல். 1

தனியார் பஸ் கட்டணங்களைக் குறைக்குமாறு சீருடையினர் பஸ் சாரதிகளைக் கேட்கின்றனராம்.

கொழும்பு - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் போக்குவரத்துச் சேவையினர் தற்பொழுது ஒவ்வொரு பிரயாணியிடமும் 200ரூபா வசூலித்து வருகிறார்கள்.

'கட்டணங்கள் மிகவும் அதிகம் குறையுங்கள்' என்று ஆனையிறவு தடைமுகாமில் உள்ள சீருடையினர் பஸ் சாரதிகளிடம் கூறுகின்றனராம்.

காரைதீவில் 154பேர் விடுதலை

அம்பாறை, ஏப்ரல். 1

காரைதீவுக் கிராமத்தில் கைதுசெய்யப்பட்டவர்களில் இதுவரை 154பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை 53பேரும் சனிக்கிழமை 21பேரும் ஞாயிற்றுக்கிழமை 80பேரும் விடுவிக்கப்பட்டனர்.

ஏனையோர் மீதான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொய்யாமொழி

குறள்:

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

பொருள்:

கேடும் ஆக்கமும் வாழ்வில் இல்லாதவை அல்ல; ஆகையால் நெஞ்சத்தில் நடுவு நிலைமை தவறாமல் இருத்தலே சான்றோர்க்கு அழகாகும்.

நல்ல இலக்கியப் படைப்புகள் சமூக இயக்கத்தை எடுத்துக்காட்ட வேண்டும்

'வெள்ளோட்டம்' விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப்.1

நல்ல இலக்கியப் படைப்புகள் சமூகம் இயங்கும் விதத்தை எடுத்துக் காட்ட வேண்டும்.

சமூக, பொருளாதாரக் காரணிகளில் வேரூன்றுவது அவசியம்

ஏனையவை இலக்கிய வரலாற்று நீரோட்டத்தில் தூக்கி எறியப்படும்.

கோப்பாய் சிவம் எழுதிய 'வெள்ளோட்டம்'' என்ற நாவல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய கலாநிதி நா. சுப்பிரமணியன் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற வெளியீட்டு விழாவுக்கு திரு சு சபாரத்தினம் தலைமை வகித்தார். கவிஞர் கல்வயல் குமாரசாமி வரவேற்புரை கூறினார்.

திரு. மயில் அமிர்தலிங்கம் முதற் பிரதியைப் பெற்றார்.

கலாநிதி சுப்பிரமணியன் தொடர்ந்து கூறியதாவது:

இவ்விரு குறுநாவல்களிலும் வருகின்ற கதாபாத்திரங்கள் இலட்சியத்தை நோக்கி நடைபோடுகின்றன.

முதல் நாவலின் தலைப்பு வெள்ளோட்டம் பொருத்தமாக இருக்கிறது.

''கரைசேரும் கட்டுமரம்'' என்ற நாவலில் எந்தக் கட்டுமரமும் கரைசேரவில்லை இப்படி அவர் கூறினார்.

திரு. எஸ். எஸ். அச்சுதன்பிள்ளை பேசுகையில்:

வெள்ளோட்டம் நாவலில் தேர் பற்றிய களம் வாய்த்த போதிலும், தேர் பற்றிய பரிணாமங்கள், சிற்பக்கலை அம்சங்கள் ஆகியவை இடம் பெறாமை கவலையைத் தருகிறது என்றார்.

செங்கை ஆழியான் தனது வெளியீட்டுரையில் இன்று பல எழுத்தாளர்கள் போதியளவு எழுதுவதில்லை என்றார்.

தமிழர் பண்பாட்டுக் கூறுகளை கலையுணர்வுடன் எடுத்துச் சொல்லும் முயற்சியே தமது நாவல்கள் என்று கோப்பாய் சிவம் தனது பதிலுரையில் கூறினார்.

இலக்கிய வட்டச் செயலாளர் யாழ்வாணன் நன்றியுரை கூறினார்.

மருத்துவ, மலசல கூட, கிணறு வசதிகள் இல்லை

சுந்தரபுரம் வாசிகள் உதவி கோருகிறார்கள்

பலாலி,ஏப் 01

'சுந்தரபுரம்' வாசிகள் தங்களுக்கு வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்கள் உதவி செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பலாலி விமான நிலையப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள். வெளியேறியவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து அமைத்துக் கொண்ட புதிய குடியிருப்புத்தான் 'சுந்தரபுரம்'.

இப்பகுதியில் மலசல கூடவசதிகள், கிணறு வசதி. மருத்துவ வசதி முதலியன இன்மையால் மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் அவையாவது பொதுநல ஸ்தாபனங்களின் உதவியைப் பெற்று உதவ முன்வர வேண்டும் என்று 'சுந்தரபுரம்' வாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

4 நாள் தாக்குதலின் பின்பு பலாலிப் பகுதியில் தொடர்ந்து ஹெலிக்கொப்டர் ரோந்து

பலாலி, ஏப். 1

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் பலாலி விமான நிலையத்துக்கு அருகில் உள்ள பகுதிகளில் ஹெலிக்கொப்டர் பறந்து திரிந்தது.

காலையில் இருந்துஇரவு வரை விட்டு விட்டு ஹெலிக்கொப்டர்பறந்து திரிந்தது.

கடந்த நான்கு தினங்களாக நடந்த தொடர்ச்சியான ஹெலிக்கொப்டர் தாக்குதல்களில்பலர் மரணமடைந்தனர் என்பது தெரிந்ததே.

இதன் காரணமாக கட்டுவன், மயிலிட்டி, வயாவிளான், ஏழாலை, குப்பிளான், குட்டியப்புலம், குரும்பசிட்டி, பலாலிப் பகுதிகளில் மக்கள் நடமாட்டமே காணப்படவில்லை.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வது இல்லை மயான அமைதியும் பயமும்தான் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது

தோட்டவெளிகள், பனைக் கூடல்கள் மீதும் ஹெலிக்கொப்டரில் இருந்து சுடப்படுகிறது.

சைக்கிளில்சென்ற இருவரைக் கலைத்துக் கலைத்து ஹெலிக்கொப்டரில் இருந்து சுடப்பட்டது அந்த இரண்டுபேரும் மிளகாய்த் தோட்டங்களுக்குள் படுத்து உயிர் தப்பினர்.

வல்வை மீன் பிடி விஸ்தரிப்பு சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

வல்வெட்டித்துறை,ஏப் 1

மீன்பிடி வலயச் சட்டத்தை நீக்கும்படியும் மீனவக் குடும்பங்களுக்கு தகுந்த தாபரிப்புத் தொகை வழங்கும்படியும் கோரும் மகஜர் ஒன்றை வல்வை மீன்பிடி விஸ்தரிப்புச் சேவைச் சங்கத்தினர் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலிக்கும் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவுக்கும் அனுப்பி உள்ளனர்.

மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது;

தொண்டமானாறு தொடங்கி பருத்தித்துறை உள்ளடங்கிய மீன்பிடிப் பிரதேசத்தில் வாழும் சுமார் 2000 மீனவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீன்பிடித்தடைச் சட்டத்தினால் பட்டினியால் வாடுகின்றனர்.

கரையோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் மீன்பிடிப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள்.

மீன்பிடித் தொழிலின் அன்றாடம் வரும் ஊதியத்தை நம்பிப் பிழைப்பவர்கள்.

குறைந்தது 5 நபர்களைக் கொண்ட ஒரு மீனவ குடும்பத்தின் மாதாந்த வாழ்க்கைச் செலவு பல நூறு ரூபாய்கள் ஆகும்.

இந்நிலையில் அரசாங்கத்தினால் வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் அற்ப தொகையான 200 ரூபா அல்லது 250 ரூபா எவ்வகையிலும் அவர்களது துயர் துடைக்கப் போதுமானதல்ல.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத் தலைவர் திரு. என். வைத்திலிங்கம்.செயலாளர் திரு எஸ். சிவானந்தன் ஆகியோர் மகஜரில் ஒப்பமிட்டுள்ளனர்.

பலாலியிலிருந்து வெளியேறியோருக்கு

அரச காணி வழங்க குழு

பலாலி ஏப். 1

பலாலி விமானநிலைய விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்காக வெளியேற்றப்பட்டவர்கள் குடியிருக்க அரச காணிகள் வழங்குவது பற்றி நடவடிக்கை எடுக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது

யாழ் அரசஅதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் நியமித்துள்ள அக்குழுவின் உறுப்பினர்களாக பின்வருவோர் அங்கம் வகிக்கின்றனர்.

மேலதிக அரச அதிபர் திரு. ராமநாதர், தெல்லிப்பளை உதவி அரச அதிபர் திரு. ராஜரத்தினம், திரு. வேல்முருகு.

இதனிடையில் அரச அதிபரின் கோரிக்கையைத் தொடர்ந்து விமான நிலையச் சுற்றுடலை விட்டு வெளியேறியோர் பற்றிய விவரங்களை வயாவிளான் பிரஜைகள் குழு சேகரித்து வருகிறது.

பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ஸ்ரீ நடராசா [illegible] அரச அதிபரைச் [illegible] பேரிலேயே, அரச அதிபர் இவ் விவரங்களைச் சேகரிக்கும்படி பிரஜைகள் குழுவைக் கேட்டுக் கொண்டார்.

ஆசிரியர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஏப். 1

பூநகரியில் உள்ள தம்பிராய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை கல்வித் திணைக்களம் உடனே நிவர்த்தி செய்ய வேண்டும்.

பூநகரி பிரஜைகள் குழுத் தலைவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளருமான திரு. பொ. தங்கராசா கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிப்பாளரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்து உள்ளார்.

மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை

பருத்தித்துறை, ஏப்ரல்.1

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கு ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தினரால் வைத்தியப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் ரி. இராஜலிங்கம் பருத்தித்துறை மாவட்ட வைத்[illegible] பரிசோதனைகளை நடத்தினர்.

உயிருக்கு பாதுகாப்பு தேடவேண்டிய நிலையில் இன்றைய தொழிலாளி

வணசிங்கா கூறுகிறார்

மட்டக்களப்பு, ஏப், 1

அன்றைய தொழிலாளி தனது வேலைக்கு பாதுகாப்பு தேடினான். காரணம் வேலை பறிபோகக் கூடாதென்று. ஆனால் இன்று அந்தத் தொழிலாளி தனது உயிருக்குப் பாதுகாப்பு தேட வேண்டியவனாக இருக்கிறான். காரணம் உயிருக்கு இன்று பாதுகாப்பு இல்லை.

மட்டக்களப்புமாவட்ட தொழிற்சங்க சம்மேளனம் அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றிய சிரேஷ்ட தொழிற்சங்கவாதியும் சம்மேளன ஆலோசகருமான திரு டி எஸ் வே வணசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

புனித மரியாள் மண்டபத்தில் தற்காலிகத் தலைவர் திரு இ சோதிவேல் தலைமையில் இக்கூட்டம் நடந்தது

இதில் பல்வேறு தொழிற்சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இங்கிலாந்தில் தொழிற்சங்கம் பாதுகாப்புக்கருதி ஆரம்பிக்கப்பட்டது காலப்போக்கில் சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற நடவடிக்கையில் அது ஈடுபட்டது

இன்று எமது நாட்டுச் சூழ்நிலையில் எமக்கு குரல்கொடுக்க நாடாளுமன்றத்தில் யாருமில்லை இந்நிலையில் எமது குரல் எழும்புவதற்குரிய ஒரே ஒரு வழி இவ்வழி தான்.

இப்படி அவர் கூறினார்

மற்றும் வைபவத்தில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் திரு எம். அந்தோனிமுத்து சிறப்பு விருந்தினர்களாக, சுவாமி ஜீவானந்தாஜி திருமலை மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மெதடிஸ்த சபை தலைவர் அதன்திரு. ரி டபிள்யூ. ஜெயசீலன், காத்தான்குடி ஜம் இய்யதுல் உலமாசபைபதில் தலைவர் மௌலவி கே. எம்.எம். ஹசன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்கள்.

ஆத்மஜோதி முத்தையாவுக்கு வரவேற்பு விழா

சாவகச்சேரி, ஏப் 1

இந்தோனேஷியாவில் இரண்டாண்டுகளாக சைவசமய, தமிழ்ப் பணிகள் ஆற்றித் திரும்பி உள்ள ஆத்மஜோதி நா. முத்தையா மட்டுவில் வடக்கு சைவ வட்டத்தினரால் வரவேற்றுப் பாராட்டப்பட்டார்.

திவ்யஜீவன சங்கத் தலைவர் திரு. க. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் மட்டுவில் மகா வித்தியாலய இளைப்பாறிய அதிபர் திரு த. காசிநாதன் திரு. க. நடராசா ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர்.

நிதித்துறையில்
நாணயம் மிக்க
நண்பன்
SHABRA
61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4
தொலைபேசி 589310
500576

உதயன்

01 04 1986 செவ்வாய்க்கிழமை

நம்பிக்கையுடன் சேமிக்க
"ஷப்ரு"வின்
துணையை நாடுங்கள்
SAHBRA
207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி :- 22073

மன்னாரையும் புத்தளத்தையும் இணைக்க புதிய வீதி

ஆயுதப்படையினர் அவசரமாக அமைப்பு

கொழும்பு, ஏப். 1 புத்தளத்தையும் மன்னாரையும் கரையோரப் பகுதியால் இணைக்கும் புதிய வீதி ஒன்று ஆயுதப் படையினரின் உதவியுடன் அவசரம் அவசரமாக அமைக்கப்பட்டு வருகின்றது. புதிய வீதி போடப்பட்ட பின்னர் புத்தளத்துக்கும் மன்னாருக்கும் இடையிலான தூரம் 45 மைலாகக் குறைகின்றது.

இப்போது புத்தளத்தில் இருந்து மன்னார் வருவதற்கு வில்பத்து, அனுராதபுரம் ஊடாக 115 மைல்கள் பயணஞ் செய்யவேண்டியுள்ளது.

தீவிரவாதிகளின் தாக்குதல்கள் மன்னாரில் இடம்பெற்றால் மேலதிக படைகள் மன்னாருக்குச் செல்ல நீண்ட தூரம் பயணம் செய்யவேண்டி உள்ளது.

புதிய வீதி வெகு விரைவில் பாதுகாப்புப் படையினர் மன்னாருக்குச் செல்லுவதற்கு உதவும்.

அத்துடன் புத்தளம் — மன்னார் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தவும் இந்த வீதி உதவும் என்று கூறப்படுகின்றது.

திருநெல்வேலியில் ரூபா 5 லட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப். 1 திருநெல்வேலியில் ரூபா 5 லட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

திருநெல்வேலி குமாரசாமி வீதியில் உள்ள வர்த்தகர் ஒருவரின், வீட்டில் வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சம்பவதினம் இரவு 8.15 மணியளவில் ஆயுதம் தாங்கிய 15பேர் சம்பந்தப்பட்ட வீட்டுக்கு வந்தனர். அங்குள்ளவர்களை ஆயுதமுனையில் மறையினுள்விட்டுப் பூட்டினர். பின்பு அவ்வீட்டிலுள்ள சிறு பிள்ளையை உட்டும் அறைகளுக்குள் கூட்டிச் சென்று பொருள்களின் மறைவிடங்களைக் காட்டுமாறு துப்பாக்கி முனையில் பயமுறுத்தினர்.

அங்கிருந்த தொலைக்காட்சிபெட்டி, ரேடியோக் கோடர், அயன் பெட்டி, சூட்கேஸ், உடு புடைவைகள் மற்றும் நகைகள், ரொக்கப்பணம் ஆகியவை அபகரிக்கப்பட்டன.

வீட்டில் இருந்த பெண்கள் சிறுவர்கள் அப்பொழுது அணிந்திருந்த நகைகளும் அபகரிக்கப்பட்டன.

இச்சம்பவம் 45 நிமிட நேரம் நடந்து முடிந்ததாக அறியப்படுகின்றது.

வடபகுதி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருர்கள் என்பதற்கு ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்துள்ளன.

இச்செயலால் பாதிப்பு அடையப்போவது வடபகுதி மக்களே. எந்தச் செயலாலும் அரசாங்கத்தை மிரட்டலாம் என்று நினைக்கக்கூடாது.

மிரட்டுபவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வடபகுதி மக்களே இக்கட்டான நிலையையும் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அரச சொத்துக்களை அபகரிக்கும் செயல்கள் நடைபெறுகின்றன.

இதனால் வடக்கு, கிழக்கு மக்கள் இக்கட்டான நிலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

அரசாங்கத்தைமிரட்டி அரச சொத்துக்களை அபகரிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எந்தவித காரணம் கொண்டும் மன்னிப்பு அளிக்கப்படமாட்டாது.

இப்படி பாதுகாப்பு அமைச்சு அதிகாரி சொன்னார்.

ராஜனின் இறுதிச்சடங்கு

மட்டக்களப்பு, ஏப் 1 மட்டக்களப்பு முன்னாள் இரண்டாவது எம்பி திரு ராஜன் செல்வநாயகத்தின் இறுதிக் கிரியைகள் நேற்று மட்டக்களப்பு கல்லியங்காடு மைதானத்தில் நடைபெற்றன.

38ஸ்ரீ 8813 இலக்கமுடைய (TOYATA HIACE) பாடசாலை போக்குவரத்துச் சேவை வானுக்கும் எனக்கும் 1-3-86இல் இருந்து எந்தவித தொடர்பும் இல்லை என்பதை அறியத்தருகிறேன்
இந்திரன் உரிமையாளர்
திருப்பதி ஸ்ரோர்ஸ்
இல 4, செட்டித்தெரு, நல்லூர்

வெளிவந்து விட்டது!
'கேள்வியும் நிரப்பலும்'
விலை ரூபா 18|-
ந. பேரின்பநாதன் - ப சிவநாதன்
(யாழ்ப்பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்.)
60க்கும் அதிகமான விளக்கப்படங்களுடன்
150பக்கங்களைக் கொண்டுள்ளது.
தொகையாகக் கொள்வனவு செய்யும் பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவுண்டு
வெளியீடு
பட்டப்படிப்புகள் கல்லூரி
148|1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உதயன் எக்ஸ்போட்ஸ் லிமிடெட்,207 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியீட்டுத் திகதி 01-04-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QJ60 N 86

சிறையில் வாடும் தமிழர்கள் விவரம்

கொழும்பு, ஏப் 1 வெலிக்கடைச் சிறை, பூஸா தடுப்பு முகாம், நீர்கொழும்புச்சிறை, ஆகியவற்றில் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் பற்றிய ஒரு புள்ளிவிவரம் இதோ:-

23 3 86 வரை வெலிக்கடைச் சிறையில் 222 தமிழ்க் கைதிகள் இருந்தனர்.

இவர்களில் 44 பேர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீது வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

26 பேர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களினால் தண்டிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவிப்பவர்கள்.

151 பேருக்கு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப் பத்திரிகைகள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்ட ஒருவர் தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்து விட்டு காத்துக் கொண்டிருக்கின்றார்.

பூஸா தடுப்பு முகாமில் 1,100 தமிழர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்புச் சிறையில் 7 தமிழ்ப் பெண்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

ஜீ சி ஈ. முடிவுகள் இந்த வாரத்தில்

கொழும்பு, ஏப் 1 ஜீ சி ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இந்த வாரத்தில் வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலைகள் ஏப்ரல் விடுமுறைக்கு மூடப்படுவதற்கு முன்னர், ஜீ. சி ஈ சாதாரண தரப் பத்திரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி விடும் என்று திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கண்டாவளைப் பகுதியில் ஒரே நாளிற் பல கொள்ளைகள்

கொள்ளையர் சுட்டதில் இளைஞன் பலி

— விஸ்வமடு செய்தியாளர் —

விசுவமடு, ஏப்.1 கண்டாவளைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை ஐந்துவீடுகளில் கொள்ளை நடந்தது. ஒருகொள்ளைச் சம்பவத்தின்போது இளைஞர் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

வாகனம் ஒன்றில் நள்ளிரவு சுமார் 12மணியளவில் வந்த ஆயுதந் தாங்கியோரே இக்கொள்ளையை நடத்திச் சென்றனர். ஐந்து வீடுகளிலும் நகைகள், பணம் உட்பட சுமார் இரண்டு லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச் சம்பவங்கள்பற்றி அறியப்படுவதாவது:-

கிராமசேவையாளரும் இணக்க சபைத்தலைவருமான ஒருவரின் வீடும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கட்டைக் காற்சட்டையும் சேட்டும் அணிந்து வாயை மூடித்துணி கட்டியபடியே வீடுகளுக்குள் நுழைந்த கொள்ளையர் வீடுகளில் உள்ளவர்களைத் துப்பாக்கி முனையில் பணயம் வைத்து வீடுகளைச் சோதனையிட்டனர். சோதனையின் போது ஆண், பெண் வயது வித்தியாசமின்றி எல்லோரையும் தூஷண வார்த்தைகளால் ஏசினராம்.

செட்டியார் என அழைக்கப்படும் சின்னத்தம்பி வீட்டில் கொள்ளை நடைபெற்றபோது அவரது மகனை சிவானந்தராசா (வயது 26) கொள்ளையரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானார்.

கொள்ளையடிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களின் விவரம்:-

1. மு மகேஸ்வரன் (கரைச்சி உபஅலுவலகத்தில் கடமை புரிபவர்) இவரது வீட்டில் பிள்ளைகள் அணிந்திருந்த நகைகள் கழற்றப்பட்டதுடன், உழவு இயந்திர உதிரிப் பாகங்களும் கொள்ளை.

2. சி பரமதாஸ் (தருமபுரம் கிராமசேவையாளரும், கண்டாவளை இணக்க சபைத் தலைவரும்) இவரதும், மனைவியாரதும், பிள்ளைகளினதும் நகைகளும் ரொக்கப் பணமும், மணிக்கூடும்.

3 க.நவரத்தினசிங்கம் நகைகளும் எவர்சில்வர் பாத்திரங்களும் கொள்ளை.

4 வ. பாலசுந்தரம்- (முன்னாள் ப. நோ. கூ. ச. முகாமையாளர்) இவரது மனைவியாரும் பிள்ளைகளும் அணிந்திருந்தநகைகளும்,கசெற்றும், மணிக்கூடும் கொள்ளை.

5 மு சின்னத்தம்பி- நகைகள் கொள்ளை.

திரு. மகேஸ்வரன் வீட்டில் கழற்றப்பட்ட இரு பெண் பிள்ளைகளின் தோடுகள், அவர்கள் கதறியழுததால் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

காமன் வெல்த் .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்த முடியாது என பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவித்தார்

இரு அமைச்சர்களும், பிரிட்டனில் இந்திய தீவிரவாதிகளுக்கு இடம் கொடுக்காது இருப்பது குறித்து நீண்ட நேரம் பேசினர்

அதனைத் தொடர்ந்து தீவிரவாதிகளை நாடுகடத்தும் ஒப்பந்தம் ஒன்றும் இரண்டு நாடுகளும் விரைவில் கைச்சாத்திட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

போராளி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாக இரு தரப்பினரும் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

பின்னர் சிப்பாய்கள் பிரதான வீதிக்கு வந்தனர். அந்தச் சமயம் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ்ஸை சிப்பாய்கள் மறித்தனர். பயணிகளை இறக்கிய பின்னர், சிப்பாய்கள் பஸ்ஸை எடுத்துக் கொண்டு மீண்டும் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்றனர். சிறிது நேரம் கழித்து சிப்பாய்கள் பஸ்ஸைத் திருப்பிக் கொண்டு வந்து பயணிகளை யாழ்ப்பாணம் செல்ல அனுமதித்தனர்.

படுகாயமடைந்த 3சிப்பாய்களில் பஹிந்தா (வயது23) என்பவருக்குத் தலையில் பெரிய காயம் ஏற்பட்டது. காயமடைந்த ஏனைய சிப்பாய்கள் பெயர்வருமாறு:

பிரேமரத்தின (வயது 23) தர்மரத்தின (வயது 24)

இந்திய . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரிடமே இருக்கும்.

வெளியுறவு அமைச்சராக திரு. பலிராம் பகத், நிதி அமைச்சராக திரு. வி. பி சிங், கைத்தொழில் அமைச்சராக திரு என். டி திவாரி ஆகியோர் தொடர்ந்து இருப்பர் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இன்று . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள வேலைநிறுத்தத்தில் குதிக்கின்றன.

கொழும்பு ஆஸ்பத்திரி வளவில் உள்ள விகாரையில் 21 தொழிற்சங்கங்கள் ஞாயிற்றுக்கிழமை கூட்டம் ஒன்றை நடத்தின.

அரச டாக்டர்கள் சங்கம், பல்வைத்தியர் சங்கம் ஆகியனவும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டன.

இன்று கொழும்பு ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைகள் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

ஓய்வூதியம் பெறும் திகதிகள்

யாழ்ப்பாணம், ஏப். 1 தபாற் கந்தோர்கள் ஊடாக ஓய்வூதியம் பெறுவோர் ஏப்ரல் மாதத்தில் கீழ்க்காணும் திகதிகளில் யாழ் விளையாட்டு அரங்கில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

16 4 86: வட்டுக்கோட்டை, வயாவிளான், மானிப்பாய், உரும்பிராய்.

17 4 86: யாழ்ப்பாணம், கொடிகாமம், கைதடி.

18.4 86: தெல்லிப்பளை, கோப்பாய், பண்டத்தரிப்பு, வண்ணார் பண்ணை

21.4 86: சுன்னாகம், நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு

22 4.86: பருத்தித்துறை, கொக்குவில், காங்கேசன்துறை

23. 4 86: சாவகச்சேரி, காரைநகர், வேலணை, அளவெட்டி.

25 4 86: ஊர்காவற்றுறை, அச்சுவேலி, புங்குடுதீவு, சுழிபுரம்.

28.4.86: அரவெட்டி, வல்வெட்டித்துறை, சங்கானை, யாழ்ப்பாணம்.

இனக் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாவித் தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

✤ வேண்டும் என்றே அப்பாவி விவசாய, மீன்பிடித் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றனர்

✤ தடுப்புக் காவலில் உள்ள தமிழர் கொல்லப்படுகின்றனர்.

இப்படி மூன்று வகையான முறையில் தமிழர் இலங்கையில் கொல்லப்படுகின்றனர்.

திருமலை முன்னாள் எம். பி. இரா. சம்பந்தன் கண்டவாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டரங்கு

அரியாலை அணி வெற்றி!

பொற்பதியைத் தோற்கடித்தது

யாழ்ப்பாணம், ஏப் 1 நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையிலான 22 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

இறுதியாட்டத்தில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை அரியாலை அணி தோற்கடித்தது.

இந்த ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கோண்டாவில் குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பம் முதல இறுதி வரை ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.

ஆட்டம் தொடங்கி 15 ஆவது நிமிடத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக முன்னணி வீரர் ப. பிரேம்குமார் லாவகமாக ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளைவரை ஐக்கிய விளையாட்டுக் கழகம் முன்னணியில் நின்றது.

இடைவேளைக்குப் பின்னர் பொற்பதி வீரர் ஜெயகாந்தன் கோல் ஒன்றைப் போட்டு கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தினர்.

தொடர்ந்து ஆட்டம் நடைபெற்றது ஒதுக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் ஒரே அளவு கோல்களைப் போட்டிருந்ததால் மேலதிகமாக 10 நிமிட நேரத்திற்கு ஆட்டம் நீடிக்கப்பட்டது.

எனினும் அந்த நேரத்திலும் இரு அணிகளும் மேலதிகமாக கோல் எதுவும் போடவில்லை.

அதனால் 'பெனல்டி' உதை மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ் சிவகுருநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சாம்பியனான அரியாலை அணியில் பின்வருவோர் அங்கம் வகித்தனர்:- ப சுரேஸ்குமார் (அணித் தலைவர்), ச விஜேந்திரன் (உப தலைவர்), ப. பிரேம்குமார், கு. ராஜ்குமார், நா. ஸ்ரீகாந்தன், அ இந்திரகுமார், க. நிஷாந்தன். சா. நேசகுமார், பூ. பார்த்திபன், தா. ராஜ்குமார், சி சுரேஸ், யோ. ஜெயபாரன் கு சுரேந்திரா, ச செழியன், சி ரவிச்சந்திரன்.

பாகிஸ்தான் மீண்டும் வெற்றி

கொழும்பு, ஏப். 1 நேற்று நடைபெற்ற ஆசிய கிண்ணத்திற்கான இரண்டாவது கிரிக்கெட் ஆட்டத்திலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் அணியை பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களினால் தோற்கடித்தது

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 35 3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் அணி 31 1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 97 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றி பெற்றது

வவுனியா தாக்குதலுக்கு "ரெலா" உரிமை கோருகிறது

சென்னை, மார்ச் 31 வவுனியா — கண்டி வீதியில் வவுனியா மகா வித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்ற கண்ணி வெடித்தாக்குதலில் 11 அதிரடிப்படை பொலிஸார் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

அவர்கள் வந்த 2 ஜீப்புகள் முற்றுகச் சேதம் அடைந்தன.

எமது தோழர்களே இத்தாக்குதலை நடத்தினர் என்று தமிழ் ஈழ விடுதலை இராணுவம் (ரெலா) சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் உரிமை கோரியுள்ளது.

இச்சம்பவம் 25. 3 86 காலை 7 மணியளவில் இடம்பெற்றது.

மார்ச் 26 இல் வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் வைரவப்புளியங்குளம் எனும் இடத்தில் எமது போராளிகளால் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியை அகற்ற முற்பட்ட சமயம் இரண்டு கறுப்புச் சட்டைக்காரர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அதன் பின்னர் எமது போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையே ஏற்பட்ட நேரடி மோதலில் வவுனியா பிராந்திய அமைப்பாளர் லெப்டினன்ட் எஸ் கே. குமார்(இளங்கோ) வீரமரணம் அடைந்தார்.

இப்படி தமிழ் ஈழ விடுதலை இராணுவம் தனது அறிக்கையில் உரிமை கோரியுள்ளது.

யாழ் ப. நோ. கூ. ச. வேலைநிறுத்தம்

நல்லூர், ஏப். 1 யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் திங்கள் முதல் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

இதனால் சகல யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இன்று மூடப்பட்டிருக்கும்.

தோழர் எஸ். எஸ். மனோகரனுக்கு நிபந்தனை இன்றி மீண்டும் வேலை வழங்க வேண்டும்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக வாழ்க்கைப்படி ரூபா 358 ஐ முன் நிலுவையுடன் வழங்க வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளை முன் வைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்துள்ளது.

வேலை நிறுத்தத்தில் 38 பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளைச் சேர்ந்த 165 ஊழியர்கள் கலந்து கொள்வர்.

வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளும் ஊழியர்கள் இன்று காலை எட்டு மணிக்கு முன் யாழ் மின்சார நிலைய வீதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் பகிஷ்கரிப்பு அரசியல் தலையீடு

கொழும்பு, ஏப், 1 ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா கலந்து கொள்ளமறுத்ததில் அரசியல் தலையீட்டின் தொனி தெரிகிறது.

சட்டத்தரணி எஸ். நடேசன் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த விவாதம் ஒன்றில் பங்குபற்றுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

விளையாட்டும் அரசியலும் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்க முடியாதது பிரிக்கப்படவும் கூடாது- என்ற தலைப்பில் இந்த விவாதம் நடந்தது.

இராசுவிடம் பிரஸ்தாபம்

நல்லூர், ஏப் 1 சந்நிதி முருகன் கோயில் விவகாரம் இந்து கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சந்நிதி கோயிற்பகுதியில் சமீபத்தில் நடந்த அட்டூழியங்களால் ஆலயம் பூசையிழந்து கிடக்கிறது.

ஆலயத்தைச் சுற்றி உள்ள பொதுமக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் கொழும்புப் பிரதிநிதிகளான திரு. எஸ் குமாரசாமி, வி. அரசரத்தினம் ஆகியோர் நேற்று அமைச்சர் இராசதுரையை சந்தித்தனர்.

இதசம்பந்தமான முடிவுகள் கிடைத்ததும் சந்நிதி ஆலய பக்தர்களை அழைத்து யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டம் நடத்தப்படும் என்று பேராசிரியர் சிவத்தம்பி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட தமிழர் எண் ஒரு புள்ளிவிவரம்

யாழ்ப்பாணம், ஏப். 1 மார்ச் மாதத்தில் 82 தமிழர் (பெண், வயோதிபர், குழந்தைகள் உட்பட) துப்பாக்கிச் சூடு, குண்டு வீச்சுக்குப் பலியாகினர்.

சம்பவம் நடை பெற்ற இடம், திகதி, எண்ணிக்கை வருமாறு:

மார்ச் 1: கட்டைப் பறிச்சான் - 03, வவுனதீவு - 05
மார்ச் 3: பொகவந்தலாவ - 01
மார்ச் 4: நயினாதீவு -04
மார்ச்6 : தாண்டவன்வெளி - 01, மண்முனை - 01, கன்னியா - 06.
மார்ச் 8: பறையனாலங்குளம் - 06
மார்ச் 9: அச்செழு - 01
மார்ச் 13: மயிலிட்டி - 03
மார்ச் 14: பரந்தன்-01
மார்ச் 16: வட்டக்கச்சி - 04, வவுனியா -02, தொண்டமானாறு - 01
மார்ச் 17: நாவற்குழி - 01, மூதூர் - 05
மார்ச் 19: மட்டக்களப்பு - 01
மார்ச் 20; நெடுங்கேணி - 12
மார்ச் 21: புதுக்குடியிருப்பு - 07, தொண்டமனாறு - 01
மார்ச் 22: யாழ்ப்பாணம் - 02
மார்ச் 23: ஊர்காவற்றுறை - 01, தொண்டமனாறு - 03
மார்ச் 25: வவுனியா - 05
மார்ச் 26: பலாலி - 01
மார்ச் 29: பருத்தித்துறை - 01
மார்ச் 30: வந்தாறுமூலை - 02.

ஜனவரியில் 141 தமிழரும் பெப்ரவரியில் 171 தமிழரும் துப்பாக்கிச் சூடு, குண்டு வீச்சில் மரணமானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.